# Telephonic conversation between Prime Minister and Vladimir V. Putin, President of Russia on COVID-19

March 25, 2020

## Covid-19 பற்றிய பிரதம மந்திரி மற்றும் விளாடிமிர் புதின் , ரஷ்ய ஜனாதிபதி இடையே நடைபெற்ற தொலைபேசி உரையாயாடல்.

மார்ச் 25,2020

பிரதம மந்திரி ஸ்ரீ நரேந்திர மோடி ரஷ்ய கூட்டமைப்பின் ஜனாதிபதி மேன்மை பொருந்திய விளாடிமிர் புதின் உடன் இன்று தொலைபேசி உரையாடலை நிகழ்த்தினார். Covid-19 பெருந்தொற்றின் உலகளாவிய சூழலை பற்றி இரு தலைவர்களும் விவாதித்தனர்.

.ரஷ்யாவில் நோய் பாதித்த அனைவரும் வெகு விரைவில் குணமடைய பிரதம மந்திரி தனது வாழ்த்துக்களை தெரிவித்தார் மற்றும் இந்த நோயை எதிர்த்து போராட ஜனாதிபதி புதின் தலைமயிலான ரஷ்யாவின் முயற்சிகள் வெற்றிகரமாக இருக்கும் என்ற நம்பிக்கையை வெளிப்படுத்தினார்.

Covid- 19 ஐ எதிர்த்து இந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெற்றிக்கு ஜனாதிபதி புதின் பிரதமருக்கு தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

சுகாதாரம், மருத்துவன்,விஞ்ஞான ஆராய்ச்சி,மனிதாபிமான விஷயங்கள் மற்றும் உலகப் பொருளாதரத்தில் ஏற்படும் பாதிப்புகள் உள்ளிட்ட இந்த புதிய உலகளாவிய நெருக்கடியால் எதிர்கொள்ளும் அனைத்து சவால்களையும் போதுமான அளவில் எதிர்கொள்வதில் இரு தலைவர்களும் மேலதிக ஆலோசனை மற்றும் ஒத்துழைப்புக்கு ஒப்புக்கொண்டனர். G 20 கட்டமைப்புக்குள் உட்பட, ஒற்றுமையாக Covid-19 ஐ எதிர்த்து போராடுவதற்கான சர்வதேச ஒத்துழைப்பின் முக்கியதுவத்தை அவர்கள் வலியுறுத்தினார்.

ரஷ்யாவில் இந்திய மாணவர்களின் நல்வாழ்வை உறுதி செய்வதில் ரஷ்ய அதிகாரிகளின் ஒத்துழைப்பை பிரதமர் பாராட்டினார், அது தொடரும் என்ற நம்பினார்.இது தொடர்பாக ஜனாதிபதி புதின் அணைத்து உதவிகளையும் உறுதிபடுத்தினார். ரஷ்யநாட்டினரின் நல்வாழ்வையும் ஒழுங்கமைக்கப்பட்ட வருவாயையும் உறுதி செய்வதற்க்கான முயற்சிகளை சம்பத்தப்பட்ட இந்திய அதிகாரிகள் தொடர்ந்து அணைத்து வழிகளிலும் எளிதாக்குவார்கள் என்ற பிரதமர் ஜனாதிபதி புதினிடம் தெரிவித்தார்.

இரு தலைவர்களும் சிறந்த வேகத்தைத் தக்க வைத்துக்கொள்வதற்கான நெருக்கமான ஒத்துழைப்பைத் தொடரவும், நல்ல மற்றும் நேர சோதனைக்குட்பட்ட இரு தரப்பு உறவுகளின் அரவணைப்பைத் தொடரவும் ஒப்புக்கொண்டனர். ஆண்டின் போது அவர்கள் நேரில் தொடர்பு கொள்வதற்கான பல வாய்ப்புகளை எதிர்நோக்கியுள்ளதாக அவர்கள் மீண்டும் வலியுறுத்தினர்.

**நியூ டெல்லி**
**மார்ச் 25, 2020**

DISCLAIMER : This is an approximate translation. The original is available in English on MEA’s website and may be referred to as the official press release.